# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 139 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 16.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# "ஒரு கோடி இளைஞர்களுக்கு ஏஐ பயிற்சி, தேர்வுகளுக்கு இலவச பயிற்சி"

## சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவிப்பு



புது டெல்லி:

"மாணவர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு தேர்வுகளுக்கான இலவச இணையவழிப் பயிற்சி வழங்கப்படும். அடுத்த ஓராண்டில் ஒரு கோடி இளைஞர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பு பயிற்சி அளிக்கப்படும்" என்று பிரதமர் மோடி தனது சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

நாட்டின் 80வது சுதந்திரதினத்தை முன்னிட்டு டெல்லி செங்கோட்டையில் மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட அவர், "தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் என்பது நடுத்தர வர்க்கக் குடும்பங்களுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது. தங்கள் குழந்தைகளைப் பயிற்சி மையங்களுக்கு அனுப்பவில்லை என்றால், அவர்கள் பின்தங்கிவிடுவதாக ஒவ்வொரு பெற்றோரும் உணர்கிறார்கள்.ஏழை மற்றும் நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் கவலைகளைக் கருத்தில் கொண்டு, பயிற்சி வகுப்புகளுக்காக அவர்கள் செலவிடும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாயைச் சேமிக்க உதவ விரும்புகிறோம். நமது இளைஞர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இருந்து, அவர்களின் அரவணைப்பைப் பெற வேண்டும்; அதேவேளையில், குடும்பத்தின் மீது கூடுதல் நிதிச் சுமையைச் சுமத்துவதைத் தவிர்க்க வேண்டும். எனவே, நமது இளைஞர்களுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச இணையவழிப் பயிற்சியை வழங்க முடிவு செய்துள்ளோம். நம்மிடம் டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு உள்ளது; அதேபோல் திறமையான ஆசிரியர்களும் கல்வியாளர்களும் உள்ளனர். இந்த வளங்களை ஒன்றிணைப்பதன் மூலம், நாட்டின் இளைஞர்களுக்கு இலவசப் பயிற்சியை வழங்குவதோடு, இதற்கென ஒரு முழுமையான கட்டமைப்பையும் உருவாக்குவோம்.

செயற்கை நுண்ணறிவு துறையில் உலகை வழிநடத்தும் திறனை நம் நாட்டு இளைஞர்கள் பெறும் வகையில், வரும் ஓராண்டில் ஒரு கோடி இளைஞர்களுக்கு ஏஐ திறன் பயிற்சியை வழங்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.வளர்ந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் இளைஞர்களுக்கு மிக முக்கிய பங்கு உண்டு.அதுமட்டுமின்றி, வளர்ந்த இந்தியாவின் மிகப்பெரிய பயனாளிகளாகவும் அவர்களே இருப்பார்கள்.

எனவே, வளர்ந்த இந்தியா என்ற இலக்கை நமது இளைஞர்களுடன் இணைத்து நாம் முன்னேற வேண்டும்.இளைஞர்களுக்கு நாம் மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்க வேண்டும்" என்று பிரதமர் மோடி கூறினார்.

# லஞ்சம், ஊழலில் இருந்து தமிழகத்தை காக்க வந்துள்ளோம்

## கோட்டை கொத்தளத்தில் தேசியக்கொடி ஏற்றி முதலமைச்சர் விஜய் பேச்சு



தமிழகத்தின் முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு விஜய் தனது முதல் சுதந்திர தின விழாவில், சென்னை ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றினார்.

நாடு முழுவதும் சுதந்திரதினவிழா வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடக்கும் இந்தவிழாவில் முதல்-அமைச்சர் தேசியக்கொடி ஏற்றுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு முதல்-அமைச்சர் விஜய் கலந்து கொண்டு தேசியக் கொடி ஏற்றினார்.

இதற்காகஅவர்,இன்று காலை சுமார் 8 மணியளவில் நீலாங்கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து காரில் புறப்பட்டார். மெரினா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே வந்ததும், சென்னை காவல்துறையின் மோட்டார் சைக்கிள்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து அவரை கோட்டைக்கு அழைத்து வந்தனர்.

காலை சுமார் 8.35 மணியளவில் கோட்டை முன்பாக அமைக்கப்பட்டுள்ள அணிவகுப்பு மரியாதை ஏற்ற விஜய் மேடையை வந்தடைந்தார். அவரை தலைமைச் செயலாளர் சாய்குமார் வரவேற்றார். அதன்பிறகு மேடைக்கு வந்த விஜய், அங்கு காவல்துறையினரின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து திறந்த ஜீப்பில் சென்று காவல்துறையினரின் அணிவகுப்பை பார்வையிட்டார்.

80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு முதல்-அமைச்சர் விஜய் சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக்கொடி ஏற்றினார். இதன் பின்னர் அவர் பேசியதாவது;

"என் நெஞ்சில் குடியிருக்கும் மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகள். சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு வீர வணக்கம். அனைவரும் இணையும் இடத்தில் சாதி, மதம், இனம் நொறுங்கும். தமிழகத்தை லஞ்சத்தில் இருந்து காப்பாற்றுவதும் விடுதலை தான். லஞ்சம், ஊழலில் இருந்து தமிழகத்தை காக்க வந்துள்ளோம். சுதந்திரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டு வளர்கிறோம்.

வெளிப்படையான நிர்வாகம் நடைபெறுகிறது. கொள்கைக்கு எதிரான விஷயங்களை அரசு நிச்சயம் எதிர்க்கும். மத்திய அரசுடன் நிர்வாக ரீதியாக ஒத்துழைப்பு. தமிழகத்திற்கு எதிரான திட்டங்களை எதிர்ப்போம். கடந்த அரசு கொண்டு வந்த நல்ல திட்டங்கள் கைவிடப்படவில்லை. ஜெயலலிதா கொண்டு வந்த அம்மா உணவகம் தொடர்ந்து நடத்தப்படுகிறது. 100 நாள் திட்டம் 125 நாள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த 3 மாதத்தில் விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கோவில் நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு, ஆன்லைனில் ஏற்றப்படுகிறது. லஞ்சம் வாங்குவதை புகார் செய்ய வாட்ஸ் அப் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. லஞ்சம், ஊழலை ஒழிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொது வாழ்வில் சமரசம் இருக்கக்கூடாது.மக்கள் நலனே முக்கியம்.

மக்களே இனிதான் நீங்கள் நம்முடன் இருக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு நல்ல திட்டங்கள் கொண்டுவர முடியும். நான் உட்பட அனைவரும் உங்களின் சேவகர்கள். நமது அரசுக்கு எதிரான அதிகளையும், சக்திகளையும் முறியடிப்போம்.

இந்த விழாவில் விருதுகளை வாங்கப்போகும் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.

இவ்வாறு அவர் பேசினார்.

# வலுவான மாற்றத்திற்கு தயாராகும் தி.மு.க. இளைஞர்களுக்கு மாவட்ட செயலாளர் பதவி; மு.க.ஸ்டாலின் அதிரடி முடிவு



தேர்தல் தோல்விக்கு பின்னர் கட்சியில் அதிரடி மாற்றங்களை செய்ய தி.மு.க. தயாராகி வருகிறது. இதுதொடர்பாக வருகிற 22-ந் தேதி நடைபெறும் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.தோல்வி அடைந்தது. இதையடுத்து தேர்தல் தோல்விக்கான காரணங்கள் குறித்தும், கட்சியின் நிர்வாக கட்டமைப்புகளை மாற்றுவது குறித்தும், மாவட்டம் வாரியாக கட்சியின் செயல்பாடுகள் குறித்தும் குழு அமைத்து கட்சியில் நிர்வாகிகள், தொண்டர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

அவைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, அறிக்கையாக தயாரித்து, கட்சி தலைவர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது. அதில் பல்வேறு பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டு இருந்தன. அதன் அடிப்படையில் கட்சியில் நிர்வாக கட்டமைப்புகளை மறுசீரமைப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

தி.மு.க.வில் கட்சியில் அமைப்பு ரீதியாக 78 மாவட்ட செயலாளர்கள் உள்ளனர்.

இதில் சரியாக செயல்படாத சிலரது பதவி பறிக்கப்படலாம் என பரபரப்பாக பேசப்படுகிறது.

தற்போது இருக்கும் மாவட்ட செயலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, புதிய மாவட்ட செயலாளர்களை நியமிப்பது, மாற்று கட்சியில் இருந்து தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு பதவி வழங்குவது தொடர்பாக வருகிற 22-ந்தேதி நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு பின் தி.மு.க.வில் அதிரடி மாற்றங்களும், அதிரடி நடவடிக்கையும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்படி, 70 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து மாவட்ட செயலாளர் பதவி பறிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ஒரே பதவியில் மூன்று முறைக்கு மேல் இருப்பவர்களும் மாற்றப்படுவர் என்றும், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளாக 60 வயது வரை இருக்கலாம் என வரம்பு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதனால், முன்னாள் அமைச்சர்களின் மாவட்ட செயலாளர் பதவி பறிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




# ஆற்காடு நீதிமன்ற வளாகத்தில் 80வது சுதந்திர தின விழா

ஆற்காடு: ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு நீதிமன்ற வளாகத்தில்



இந்தியாவின் 80-வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி நீதிமன்ற வளாகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகள் மற்றும் வீரர்களுக்கு வீரவ ணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் தலைமை தாங்கி, தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டது.

விழாவில் அரசு வழக்கறிஞர் மணிகண்டன், வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் சுரேஷ், சங்கத் தலைவர் நந்தகுமார், சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் வழக்கறிஞர்கள் சரவணன், சத்தியமூர்த்தி, பார்த்திபன் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் கலந்து கொண்டு தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

சுதந்திர தின விழாவை முன்னிட்டு நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனைவரும் நாட்டின் ஒற்றுமை, இறையாண்மை மற்றும் ஜனநாயக மாண்புகளை பாதுகாப்பதற்கான உறுதியை வெளிப்படுத்தினர். விழா சிறப்பாக நிறைவு பெற்றது.



ஈரோடு மாவட்டம், திண்டல், அருள்மிகு வேலாயுதசாமி திருக்கோயிலில் சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற சமபந்தி விருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.08.2026) கலந்துகொண்டு உணவருந்தினார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நேற்று (15.08.2026) நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



# தேசியக் கொடியுடன் 15.5 கி.மீ. தொடர் ஓட்டம்

## IFit Club சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழிப்புணர்வு ஓட்டம் - 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

ஈரோடு மாவட்டத்தில் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, Souls of Erode அமைப்பின் கீழ்செயல்படும் I-Fit Club சார்பில், தேசப்பற்று, உடல் ஆரோக்கியம், போதை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் 15.5 கி.மீ. சுதந்திர தின தொடர் ஓட்டம் உற்சாகமாக நடைபெற்றது.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் தியாகத்தை நினைவுகூரும் வகையிலும், போதை இல்லா தமிழகத்தை உருவாக்க வேண்டும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்க வேண்டும், மரம் வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த ஓட்டம் நடத்தப்பட்டது.

தேசியக் கொடியுடன் வீரர்களின் உற்சாக ஓட்டம்

ஈரோடு ரயில்வே இன்ஸ்டிடியூட்டில் தொடங்கிய தொடர் ஓட்டம், ஈரோடு ரயில் நிலையம், அரசு மருத்துவமனை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வ.உ.சி. பூங்கா, மணிக்கூண்டு உள்ளிட்ட முக்கிய பகுதிகள் வழியாகச் சென்று மீண்டும் ரயில்வே இன்ஸ்டிடியூட்டில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் I-Fit Club, RRR, Phenix Runners - பள்ளிபாளையம், Solar Runners மற்றும் GIB Runners ஆகிய குழுக்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் தேசியக் கொடியை ஏந்தியபடி உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

தேசியக் கொடியுடன் ஓடிய வீரர்களைக் கண்ட ஈரோடு பொதுமக்கள், சாலையோரங்களில் திரண்டு நின்று கைதட்டி உற்சாகப்படுத்தி பாராட்டுகளைத் தெரிவித்தனர். இதனால் நிகழ்வு முழுவதும் தேசப்பற்று மற்றும் உற்சாகம் நிறைந்ததாக காணப்பட்டது.

தொடர் ஓட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் I-Fit Club உறுப்பினர்கள் முன்னின்று சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

உடல் ஆரோக்கியத்துடன் தேசப்பற்றையும் வளர்ப்போம்; போதையை ஒழித்து சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என்ற சமூக விழிப்புணர்வு கருத்தை வலியுறுத்திய இந்த சுதந்திர தின தொடர் ஓட்டம், ஈரோடு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

## ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில் சூரம்பட்டியில் உள்ள

# திருமகன் ஈவெரா பவன் எதிரில் நடைபெற்ற விழாவிற்கு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளர் சிட்டி கல்கி தலைமை தாங்கினார்



ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் சார்பில் சூரம்பட்டியில் உள்ள திருமகன் ஈவெரா பவன் எதிரில் நடைபெற்ற விழாவிற்கு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளர் சிட்டி கல்கி தலைமை தாங்கினார்.

இவ்விழாவில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து "சும்மா பெறவில்லை சுதந்திரம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்கள் உரை:

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட முன்னாள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான ஆர்.எம்.பழனிசாமி மற்றும் முன்னாள் மாவட்ட தலைவர், மாமன்ற உறுப்பினர் ஈ.பி. ரவி ஆகியோர் நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறு மற்றும் இன்றைய இளைஞர்களின் பங்கு குறித்து சிறப்புரை ஆற்றினர்.

இந்நிகழ்வில் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் டி.கண்ணப்பன், மாவட்டச் செயலாளர் சிட்டி திருவேங்கடம் தலைவர் சித்தோடு எஸ். பிரபு, மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் சினேகா, மண்டலத் தலைவர் மாமரத்துபாளையம் எஸ். கோபி, NCWC மாவட்ட தலைவி ஆர். கிருஷ்ணவேணி, ஈரோடு மாநகர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி அன்னபூரணி, 22வது வார்டு தலைவர் கௌதம், ஈரோடு மேற்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் வசந்த் குமார், பிரனேஷ், ஹக்கீஸ், லோகு, வெங்கடேஷ், பிரபு, சுதா, ரவிக்குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் திரளாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி தமிழ் தாய் வாழ்த்தில் தொடங்கி தேசிய கீதத்தில் முடிவடைந்தது விழாவின் முடிவில் வந்திருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த இடத்தில் கோலமிட்டு, தேசபக்தி முழக்கங்களுடன் விழா சிறப்பாக நிறை வடைந்தது.

## தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் தேசியக் கொடியேற்றினார்



தென்காசி தெற்கு மாவட்டம், கீழச்சுரண்டை TDTA தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற 80-வது சுதந்திர தின விழாவில் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே.ஜெயபாலன் அவர்கள் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நடைபெற்ற சுதந்திர தின கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, மாணவ-மாணவிகளின் திறமைகளை கண்டு மகிழ்ந்தார். இந்நிகழ்வில் சுரண்டை நகரச் செயலாளர் A.G.கணேசன், சுரண்டை நகரக் கழக நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

# ஈரோட்டில், 80வது சுதந்திர தினம் கோலாகலம் ஜவஹர் இல்லத்தில் தேசியக்கொடி பறந்தது

இந்தியாவின் 80-வது சுதந்திர தின விழா நேற்று ஆகஸ்ட் 15, 2026 அன்று தேசபக்தி எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், மாவட்ட காங்கிரஸ்



அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா தலைமை தாங்கி தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். கொடி பறந்ததும் "மகாத்மாகாந்திக்கு ஜெய்", "வந்தேமாதரம்" முழக்கங்கள் விண்ணை முட்டின. அதைத் தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர்களான மாமரத்துப்பாளையம் எஸ்.கோபி, ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம். ஞானதீபம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கட்சியின் அனைத்து அணி நிர்வாகிகளும் திரளாக கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்கள் விவரம்:

ராஜீவ்காந்தி பஞ்சாயத்து ராஜ் மாவட்டத் தலைவர் எம்.செல்வராஜ், தமிழ்நாடு வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் சி.எம்.ராஜேந்திரன், பொதுச் செயலாளர்கள் வி.கே.ச்சிதானந்தம், கராத்தே யூசுப், முன்னாள் மாவட்ட உறுப்பினர் கை.சுப்பிரமணியம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி.மாரிமுத்து, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை தலைவர் என்.கே. இப்ராஹீம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என்.பாஷா, ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு எஸ்.பிரபு, செயலாளர் சிட்டி கல்கி, என்.சி.டபிள்யூ.சி மாவட்ட தலைவர் ஆர்.கிருஷ்ணவேணி, ஈரோடு மாநகர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி அன்னபூரணி, நிர்வாகி சீதாதேவி, முன்னாள் எஸ்.சி துறை மாவட்ட தலைவர், மாவட்ட நிர்வாகிகளான சூரம்பட்டி ஆறுமுகம், வாட்டர் சிவாஜி, டீக்கடை லோகு, முனியப்பன், முன்னாள் எஸ்.சி துறை தலைவர் கே.பி.சின்னுசாமி, சம்பத் நகர் வேணுகோபால், 22-ஆவது வார்டு தலைவர் கவுதமன், திண்டல் ஏ.டி. ஜெகநாதன், ஸ்வீட் கனகராஜன், விஜயராகவ் மற்றும் பலர் கலந்து கொண்டு நாட்டின் ஒற்றுமையை பறைசாற்றினர்.



இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை ECR சாலையில் அமைந்துள்ள கார் விற்பனை நிறுவனமான கார்8டி மார்கெட் ப்ளேஸ் (CAR8T MARKETPLACE) நம் தேசிய கொடியை திரு.கல்யான சுந்தரம் மற்றும் அஜ்மல்கான் ஆலிம் ஆகியோர் ஏற்றினார்கள். உடன் நெய்னா அசாருதீன், பிலால் ஆலிம், செய்யது முஸ்ஸவ்விர், அப்துல் சலாம் ஆகியோருடன் இனிப்பு வழங்கி சுதந்திர தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடினர். அப்போது இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் மற்றும் போராடியவர்களை நினைவு கூர்ந்தனர், இந்திய திரு நாட்டிற்கும், நமது ஊருக்கும் நம்மால் ஆன பங்களிப்பை மேற்கொள்வோம் என்று உறுதி மேற்கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சரப்பாக்கம் அருகே உள்ள முருங்கை ஊராட்சி அல்லூர் கிராமத்தை சார்ந்த மாற்றுத்திறனாளிக்கு தனது சொந்த செலவில் பத்தாயிரம் மதிப்பீட்டு அளவில் கொண்ட இருசக்கர நாற்காலி வாகனத்தை 80 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் உமா மகேஸ்வரி மணவாளன் அவர்கள் வழங்கினார் இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சி செயலாளர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம் 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நேற்று (15.08.2026) நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தேசிய கொடியினை ஏற்றி வைத்து மூவண்ண பலூன்களை பறக்கவிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் 80 ஆவது சுதந்திர திருநாளை முன்னிட்டு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.



மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் 80 ஆவது சுதந்திர திருநாளை முன்னிட்டு 6 இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.



சேலம் மாவட்டம், ஓமலூர் நீதிமன்ற வளாகத்தில் 80வது சுதந்திரதினத்தை முன்னிட்டு சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதி தலைமையில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்கத் தலைவர் பி.எஸ்.சுந்தர்ராஜன், துணைத்தலைவர் மனோகரன், செயலாளர் மகாலிங்கம், ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் நீதிமன்ற அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இன்று (15.08.2026) நடைபெற்ற 80ஆவது சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள், சிறப்பாகப் பணியாற்றிய உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.போ.முத்துக்குமார் அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழினை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கே.எஸ்.பிரவீன் கௌதம், இ.கா.ப., அவர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப.ராஜகுமார் அவர்கள் உள்ளனர்.



மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் 80 ஆவது சுதந்திர திருநாளை முன்னிட்டு 15.8.26 இ.சி.ஈ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு தொளசம்பட்டியில் கிராம சபை கூட்டம்

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் பொதுமக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி பல்வேறு தீர்மானங்கள்



சேலம் வடமேற்கு மாவட்ட பொறுப்பாளர் A.M. பெருமாள் மற்றும் ஓமலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சீனிவாசன் ஆகியோரின் தலைமையில் இந்த தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வேப்பூர் அருகே உள்ள ஐவதுகுடி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா கோலாகலம்!



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகேயுள்ள ஐவதுகுடி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இந்திய நாட்டின் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை ஆசிரியர் ப.கொளஞ்சிநாதன் தலைமை தாங்கினார், பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவி மகேஸ்வரி மாரிமுத்து முன்னிலை வகித்தார். பின்னர் இருவரும் இணைந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்தனர். உதவி தலைமை ஆசிரியர் க. முருகானந்தம் வரவேற்புரை ஆற்றினார்,

தொடர்ந்து, பொதுத்தேர்விலும் குருவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது. மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இவ்விழாவில் மேலாண்மைக்குழுத் துணைத்தலைவி சாந்தி மற்றும் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கோவை சிவாஜி காலனி சௌடாம்பிகா நகரில் இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தின விழா



கோவை மாவட்டம் சிவாஜி காலனி சௌடாம்பிகா நகரில், அமைந்துள்ள செயின்ட் பீட்டர்ஸ் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, பெதஸ்தா மருத்துவமனை இணைந்து, இந்திய திருநாட்டின் 80வது சுதந்திர தின விழா கொண்டாட்டம், மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு லயன்ஸ் க்ளப் தலைவர் ஜெயசாந்தி ரூபி, மண்டல மேலாளர் லயன் ஜோஸப், மேளாளர் லயன் மனோ, ஆகியோர் கலந்துகொண்டு இந்திய திருநாட்டின் 80வது சுதந்திரத்தை போற்றும் வகையில் தெசியகொடியேற்றி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவையின் தலைவரும், சமூக ஆர்வலருமான வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கலந்து கொண்டு இந்திய திருநாட்டின் சுதந்திர தினத்தில் சுதந்திரத்தை போற்றுவோம் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் இந்த நிகழ்ச்சியில், ஜூசஸ் ட்ரான்ஸ்போர்ட் உரிமையாளர் ரஜினி மோஸஸ், பெதஸ்தா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ஐசக் கிறிஸ்டியன் மோசஸ், பள்ளியின் தாளாளர் ரோமலோ வான்மதி, மருத்துவர் ஜூவன் மோஸஸ், டாக்டர் ஜெஹானா பர்வீன், மாநகராட்சி ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர் நாகராஜ், ஆசிரியர் ரேச்சல், பெதஸ்தா மருத்துவமனை மேளாளர் ஆலிவர் ப்ரி மேன், ஜெபா, வர்ஷா, வர்ஷினி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பள்ளி குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதனை தொடர்ந்து பசுமையை காப்போம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவையின் சார்பாக சுமார் 60க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மரகன்றுகள் வழங்க பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு நரிக்குறவர் இன குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள்



ராணிப்பேட்டை மாவட்டம், ரத்தினகிரி அருகே சுதந்திரதினத்தை முன்னிட்டு, நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு அகில இந்திய தலைமை சந்தானம் ரசிகர் மன்றம் சார்பில் சிறப்பு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அண்ணன் வீரத்தமிழன் சந்தானம் அவர்களின் தலைமையிலும், அகில இந்திய தலைவர் டாக்டர் குமரவேல் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் பென்சில்கள் வழங்கப்பட்டன. குடும்பங்களுக்கு அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு, அவர்களுடன் அன்புடன் கலந்துரையாடி நலன் குறித்து கேட்டறிந்தனர்.

மாவட்ட பொருளாளர் AVR.ராஜேந்திரன், மாநில தலைவர் மற்றும் நேரடி உதவியாளர் V. சந்தானபிரபா DTDM, ராஜேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் உதவும் வகையில் தொடர்ந்து சேவையாற்றுவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். மக்கள் சேவையே மகேசன் சேவை! உதவும் கரங்கள் என்றும் ஓயாது! வாழ்க பாரதம்! வளர்க மனிதநேயம்!

## ஆற்காடு வட்டார கல்வி அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா



ஆற்காடு: ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டார கல்வி அலுவலகத்தில் இந்தியாவின் 80-வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவையொட்டி அலுவலக வளாகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகள் மற்றும் வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு வட்டார கல்வி அலுவலர் ராஜா தலைமை தாங்கி தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து சுதந்திர தினத்தின் சிறப்பு மற்றும் நாட்டின் சுதந்திரத்திற்காக தியாகம் செய்த வீரர்களின் பங்களிப்பு குறித்து நினைவுகூரப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வட்டார கல்வி அலுவலர் ராஜா இனிப்புகள் வழங்கினார். வட்டார கல்வி அலுவலர் உமா முன்னிலை வகித்தார். இதில் வட்டார கல்வி அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டு தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தி, சுதந்திர தின விழாவை சிறப்பித்தனர்.

## ஈரோடு நேதாஜி காய்கறி சந்தைக்கு அருகில் செயல்படும் பிரபல தனியார் ஹோட்டலில் 80வது சுதந்திர தின விழா காவல் ஆய்வாளர் சரவணன் தேசியக்கொடியேற்றி மரியாதை!

இந்திய நாட்டின் 80-வது சுதந்திரதினவிழா நாடு முழுவதும் மிகக் கோலாகலமாகவும், தேசபக்தி உணர்வோடும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஈரோடு நேதாஜி காய்கறி சந்தைக்கு அருகில் செயல்படும் பிரபல தனியார் ஹோட்டல் வளாகத்தில் சுதந்திரதினவிழா நிகழ்வு மிகவும் சிறப்பாகவும் எழுச்சியுடனும் நடைபெற்றது

. இந்தச் சிறப்பு மிக்க சுதந்திர தின விழாவிற்கு ஈரோடு வீரப்பன்சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் சரவணன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார். நிகழ்வின் முகப்பம்சமாக, காவல் ஆய்வாளர் சரவணன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, கம்பீரமாக மரியாதையைச் செலுத்தினார். இந்த விழாவிற்கு அந்த ஹோட்டலின் ஈரோடு கிளைமேலாளர் டயஸ் குமார் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் நிறுவனத்தின் அனைத்துப் பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

தேசியக்கொடி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு சுதந்திர தின நல்வாழ்த்துகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. ஒவ்வோர் ஆண்டும் தேசிய உணர்வை போற்றும் வகையில், ஈரோடு நேதாஜி காய்கறி சந்தைக்கு அருகில் செயல்படும் இந்த பிரபல தனியார் ஹோட்டல் நிர்வாகம் தொடர்ந்து இது போன்ற தேசப்பற்று நிகழ்வுகளை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தி வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.





கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் / ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தி.ந.வெங்கடேஷ் கோபிசெட்டிபாளையம் நகராட்சி, கரட்டூர் உரக்கிடங்கில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் கட்டுமான பணிகளை நேற்று (14.08.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.

# சாக்லெட்டுக்கு பதில் கடலை மிட்டாய் – தேவகோட்டை பள்ளியில் வித்தியாசமான சுதந்திர தின விழா



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சாக்லெட்டுக்கு பதிலாக கடலை மிட்டாய் வழங்கப்பட்டது.

விழாவிற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கி, தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சாக்லெட்டுகளைத் தவிர்த்து கடலை மிட்டாய் இனிப்பாக வழங்கப்பட்டது.

இப்பள்ளியில் மாணவர்களின் பிறந்தநாளின்போதும் சாக்லெட்டுக்கு மாற்றாக கடலை அச்சு மிட்டாய் வழங்கும் நடைமுறை பல ஆண்டுகளாக தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற எட்வின், யாழினி, ரித்திகா, தேவிகா, தட்சணா, கார்த்திகாதேவி, நவீன், விஜயகண்ணன், ஆகாஷ்குமார், சரண் உள்ளிட்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும், சபரி, ஸ்டெபி, என்ஜாய், நந்தனா உள்ளிட்ட மாணவர்கள் சுதந்திர தினத்தை முன்னிட்டு கவிதை, பேச்சு உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் சிறப்பாக பங்கேற்றனர். மாணவி ஹாசினி முழு நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கினார்.

ஆசிரியை சிவரஞ்சனி வரவேற்றார். ஆசிரியை ஆர்த்தி நன்றி கூறினார். விழாவில் ஏராளமான பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பாரதியார் உட்பட பல்வேறு சுதந்திர போராட்ட வீரர்களை நினைவு கூறும் வகையில் மாணவர்கள் மாறுவேடமிட்டு வந்து அசத்தினார்கள்

# ஈரோடு மாவட்டத்தில் கிரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் 80 வது சுதந்திர தினம் கொண்டாட்டம்



ஈரோடு மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் க்ரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் 80 வது இந்திய சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது .

இவ்விழாவிற்கு அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பாலமுருகன் தலைமை தாங்கினார் . மாநில நிர்வாகிகள் ராஜேந்திரன்,

உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . இந்த விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வருக வருக என வரவேற்று பெருந்துறை நகர செயலாளர் ஞானசேகரன் வரவேற்புரையாற்றினார்

.சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நிம்பிசம் என்றபுதிய மதத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் ஹெவன் 365

அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் தலைவர் பிசியோதெரபிஸ்ட் மருத்துவர் பிரகாஷ் மற்றும் அகில இந்திய வியாபாரிகள் முன்னேற்ற அமைப்பின் மாநிலதலைவர் பாலன் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக அமைப்பின் தேசிய துணைத் தலைவர் அக்பர் அலி கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து சுகந்திர தின வாழ்த்து வாழ்த்து செய்தியை பதிவிட்டார் .அவர் பேசும்போது நமது இளைஞர்களின் ஆற்றலும் அறிவும் முழுமையாக நமது நாட்டுக்கே பயன்பட வேண்டும் என்றார். தமிழகத்தின் மாநில செயலாளர் பூங்குன்றன் சுதந்திர தின உரையில் நாட்டின் வளர்ச்சிக்கு பிரதானமானது வரியே வரியை சுமையாக நினைக்காமல் நமது குடும்பத்துக்கு செலவிடுவது போல் நமது நாட்டுக்கும் மனம் உணர்ந்து வரி செலுத்த வேண்டும் என்ற செய்தியை பதிவிட்டார் நிகழ்ச்சியில் அமைப்பின் நிர்வாகிகள் சூரிய பிரகாஷ் ,ரபீக்,லட்சுமண செட்டி இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் நிகழ்ச்சி இறுதியாக ஈரோடு மாவட்ட தலைவர் சங்கர் நன்றியுரை ஆற்றினார் .இவ்விழாவை பாலாஜி சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார். மேலும் அமைப்பின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியங்களில் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு மதுராந்தகம் மற்றும் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய ஊராட்சிகளான களத்தூர் முருங்கை பொற்பனங்கரணை கீழ் அத்திவாக்கம் ஆகிய ஊராட்சிகளில் சிறப்பான முறையில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் களத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் திடீரென மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் ஆய்வு மேற்கொண்டு களத்தூர் ஊராட்சிக்கான வளர்ச்சி திட்ட பணிகள் ஜே ஜே நகர் பழங்குடியினர் வீட்டுமனை பட்டா வழங்குதல் மற்றும் களத்தூர் ஊராட்சியில் சாலை மேம்பாட்டு திட்டம் மேம்படுத்த தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டது



# இலஞ்சி பிளட் கல்லூரியில் சுதந்திர தின விழா நடந்தது

தென்காசி மாவட்டம் இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் பிளட் கல்லூரியில் 80வது சுதந்திர தின விழா நடந்தது.

விழாவிற்கு கல்லூரி தாளாளர் ராஜகுமார் தலைமை வகித்தார் முதல்வர் (பொ) ஷீலா நவரோஸ், ஒருங்கிணைப்பாளர் ஐசக்ஜான்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மாணவ ஆசிரியர் பொன் லோஸ்னி வரவேற்றார்

சுரண்டை விளையாட்டு கற்றுக்கொள் அறிவியல் பூங்கா ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி சுதந்திர தின உரையாற்றினார் குற்றாலம் ரோட்டரி கிளப் நிர்வாகி சைரஸ், ஒய்வு பெற்ற ராணுவ அதிகாரி அந்தோனி, சுரண்டை புத்தக திருவிழா குழு உறுப்பினர் செல்வி ஆறுமுகம், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்

மாணவ ஆசிரியர்கள் அருணா, விஷ்ணு, சௌந்தர்யா, அபிநயா, அஸ்வதி ஆகியோர் தலைமையிலான குழுவினரின் சுதந்திர தின கலை நிகழ்ச்சிகள் நடந்தது உதவி பேராசிரியர்கள் லீதியாள் சொர்ண ஜெயா, ஹெப்சிபா ஜோஸ்லின், ஸ்வீட்லீன், ஜெபா எபனேசர், மரிய சாந்தி, ராஜேஸ்வரி, அனிதா, நூலகர் ஏஞ்சலின், அலுவலக பணியாளர்கள் பிரெட்ரிக் ஜெயசந்திரன், ஷேரன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாணவ ஆசிரியர் சுபா நன்றி கூறினார்



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், துய்யம்பூந்துறை ஊராட்சி, டி.மேட்டுப்பாளையம் நூலகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (15.08.2026) ஆய்வு மேற்கொண்டார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகன் உட்பட பலர் உள்ளனர்



ஈரோடு மாவட்டம் 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நேற்று (15.08.2026) நடைபெற்ற சுதந்திரதின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தேசிய கொடியினை ஏற்றிவைத்து, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட சுதந்திர போராட்ட வீரர் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசினை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (15.08.2026) சிறப்பாக பணியாற்றிய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நற்சான்றிதழை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், துய்யம்பூந்துறை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (15.08.2026) பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு மாநகராட்சியில் சுதந்திர தின விழா கோலாகலம்

## தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்திய மேயர் நாகரத்தினம் - மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நட ந்தது



இந்தியாவின் 80-வது சுதந்திரதினத்தை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் சுதந்திரதின விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

விழாவில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், சுதந்திர தினத்தின் வரலாற்றுச் சிறப்புகள் மற்றும் நாட்டின் வளர்ச்சியில் ஒவ்வொருவரின் பங்களிப்பு குறித்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி துணைமேயர் செல்வராஜ் ,மாநகராட்சி ஆணையாளர் அர்பத்ஜெயின், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்தினர்.

சுதந்திர தின விழாவின் முக்கிய நிகழ்வாக பள்ளி மாணவ-மாணவிகளின் தேசப்பற்று பாடல்கள், நடனங்கள் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாணவர்களின் திறமையான நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்ததுடன், விழா அரங்கில் தேசப்பற்று உணர்வையும் ஏற்படுத்தின.


மாநகராட்சி வளாகம் முழுவதும் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த நிலையில், விழாவில் பங்கேற்ற அனைவரும் "வந்தே மாதரம்" என்ற முழக்கத்துடன் சுதந்திர தினத்தை உற்சாகமாக கொண்டாடினர்.

தேசப்பற்றையும், தேசிய ஒற்றுமையையும் வலியுறுத்திய இந்த சுதந்திர தின விழா, ஈரோடு மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், துய்யம்பூந்துறை ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (15.08.2026) பங்கேற்றார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

# 'PoK would have joined Jammu and Kashmir if...': CM Omar Abdullah's pitch for statehood in Independence Day address



*Jammu and Kashmir chief minister Omar Abdullah said on Saturday that people in Pakistan-occupied Kashmir (PoK) could have risen to demand their merger with J&K if the Centre had not abrogated the region's special status and revoked its statehood in 2019.Speaking at an Independence Day function in Srinagar after hoisting the national flag, Abdullah said the situation across the Line of Control (LoC) causes "pain, regret, and deep distress".*

*His remarks come amid continued action by Pakistani security forces against people in PoK, with several protesters reportedly killed or injured in firing in recent months. Omar Abdullah's statehood pitch in Independence Day address Abdullah said people in PoK could have been demanding to join Jammu and Kashmir if the Centre had not withdrawn the region's special constitutional provisions in 2019. "When I see the situation across the border, I realise that our ancestors who said 'hamlavar khabardar, hum Kashmiri hain tayyar' (Attackers beware, Kashmiris are prepared) were right," he said. He added, "Today, when we look at that part of Jammu and Kashmir across the LoC, there is pain, sorrow, and worry. In my place, I have the realisation that perhaps if our conditions had not been changed in 2019, the people of that part of Jammu and Kashmir would today be protesting to reconnect with us."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.